# புறநானூற்றில் ஈமத்தாழிகளும் நடுகல் வழிபாடும்

**மா.சங்கர்**

*உதவிப்பேராசிரியர்- தமிழ்த்துறை*

*விநாயகா மிஷன்ஸ் கிருபானந்த வாரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*சேலம் - 636 308*

**ஆய்வுச் சுருக்கம்**

மனித குல வரலாற்றில் வழிபாடு என்பது ஒரு முக்கிய இடத்தை பெறுகிறது. மனித நாகரிகம் தொடங்கிய முதல் இன்று வரை இயற்கை வழிபாடு மனித குலத்தில் பின்னிப்பிணைந்தது. வழிபாடு சார்ந்த செய்திகள் குகை ஓவியங்களிலும் தொன்மையான வழிபாட்டு கூறுகள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறியுள்ளனர். தோல் பழங்கால வழிபாட்டு முறைகள் பற்றிய அறிதல்களை அறிய முற்படும் பொழுது நடுகல் வழிபாடு முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. புழங்கால மக்கள் பண்பாட்டுடனும் நாகரிகத்துடனும் வீரச்செயலுடனும் வாழ்ந்து வந்தமை புறநானூறு வெளிப்படுத்துகிறது. முக்களின் வாழ்வியல் போர்முறை, வழிபாட்டு முறைகளைப் பற்றி விரிவான செய்திகளைச் சங்க இலக்கிய நூல்களின் வழி காணமுடிகிறது. புறநானூற்றில் நடுகல் வழிபாட்டு முறைகளைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**முன்னுரை**

சங்ககால வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அக்கால கல்வெட்டுகளோ, நாணயங்களோ கிடைக்கப் பெறவில்லை. வரலாற்றை அறிய புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் தமிழர்களின் நாகரிகம் , பண்பாடு , போன்ற வரலாற்று கூறுகளை அறியப்பெரிதும் உதவுகிறது. மூவேந்தர்கள் குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகிய இவர்களுடைய வரலாற்று குறிப்புகள் புறநானூற்றல்; முழுவதுமாக பரவி காணப்படுகின்றன. அவ்வாறு அமையபெற்ற கருத்துக்களைத் தொகுத்து விளக்கம் ஆய்வு கட்டுரையாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வு**

பெருங்கற்காலத்தைக் கி.மு.1000-கி.மு.300 எனவும் காலவரையறை செய்துள்ளனர். புதிய கற்காலத்தின் இறுதிக்கும் பெருங்கற்காலத்தின் தொடக்கத்திற்குமான இடைப்பட்ட

காலங்களில் இந்தியத் துணைக்கண்டத்தில் தென்கோடியில் வாழ்ந்திருந்த இனக்குழுவினர் மேய்ச்சல் தொழில், மண்பாண்டங்கள் செய்தல், நிலத்தைப் பண்படுத்துதல் முதலியவற்றை நன்கு அறிந்திருந்தனர். பெருங்கற்காலத்தின் இடைப்பட்ட காலங்களில் வேளாண் உற்பத்தி, உற்பத்தி சார்ந்த நிலவுடைமை, சமுதாய அமைப்பு, வணிகம், அரசுருவாக்கம், போர் முதலியன தோன்றிவிட்டமையினை அகழாய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்களான பதுக்கைக் கற்கள், முதுமக்கள் தாழிகள், நடுகற்கள், குத்துக்கற்கள் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறன.

ஆய்வு நோக்கம்

செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகை பகுப்பில் புறத்திணை கருத்துக்களை செய்மையுற எடுத்து விளக்கும் புறநானூற்றில் காணலாம். தமிழர் பண்பாடு சார்ந்த அடையாளங்கள் சிலவற்றை எடுத்து இயம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

புறநானூற்று தொகுப்பில் வரையறுத்து தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் முழுவதும் ஆய்வு எல்லையாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது

முதுமக்கள் தாழிகள் பற்றி செவ்வியல் இலக்கிய குறிப்புகள்:-

தமிழர்கள் இறந்த உடல்களை அடக்கம் செய்தமுறைகளின் படிநிலை வளர்ச்சி பற்றியும், சிலர் குழிகளில் இட்டனர். சிலர் பிணங்களுக்கென்று தனியாகக் குழி தோண்டிப் புதைத்தனர். சிலர் கற்களால்; அறைகள் எழுப்பிப் பெருங்கற்களால் தாழிட்டு அடைத்தனர். சிலர் தாழிகளில் இறந்த உடலை இட்டுத் தலைகீழாகக் கவிழ்த்துப் புதைத்தனர் என பல தகவல்கள், முதுமக்கள் தாழிகளைப் பற்றிய பதிவுகள் செவ்வியல் இலக்கியங்களில் மிகுதியாக கணப்பெறுகின்றன.

புறநானூற்றில் முதுமக்கள் தாழிகள்

சங்க இலக்கியங்களில் புறத்திணைக்கே உரித்தான கருத்துக்களை எடுத்துக் கூறுவதுடன் தமிழர்களின் வழிபாட்டு முறைகள் , சடங்கு முறைகள் , தமிழர்களின் அடையாளங்களையும் விரிவாக விவரிக்கின்றது. அவற்றில் ஒன்றாக அமையும் அடையாளமே முதுமக்கள் தாழி.

"அன்னோற் கவிக்கும் கண் அகன் தாழி "[1] (புறம்:228 : 12)

இப்பாடல் வழி,

இறந்தவரைத் தாழியில் புதைக்கும் தமிழர் வழக்கம் வளவன் இறந்தான். அவன் இறந்தது தாங்கமுடியாத பலர் தம் உயிரை மாய்த்துக்கொண்டனர் போலும். அது கண்ட புலவர் மிகப் பெரிய தாழி ஒன்று அவனுடன் சேர்த்துப் புதைக்க உதவும் வகையில் உன்னால் செய்ய முடியுமா என்று அவனுக்குத் தாழி செய்யும் குயவனை வினவுகிறார். பலர் உடன் மாய்ந்தனர் என்பது இதன் பொருள். இறந்த உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் வழக்கம் தமிழர்களிடையே இருந்ததை இந்தப் பாடல் தெளிவுபடுத்துகிறது;

"தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே"[2] (புறம்: 364 : 13)

இப்பாடல் வழி,

பெரும!உண்டும், தின்றும், இரப்போர்க்கு ஈய்ந்தம் மகிழலாம் வருக, இறந்தவரைத் தாழியிலிட்டுப் புதைக்கும் பொருங்காட்டுக்குப் போன பின்னர் துய்க்க முடியாது. எனவே இருக்கும்போதே மகிழலாம் வருக. இப்பாடலின் பொருள்.

"வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி"[3] (புறம் : 256 : 05)

முதுபாலை துறையில் தலைவி குயவனை பார்த்து, ஊருக்கொல்லாம் பிணம் புதைக்கும் தாழி செய்து தரும் கோமகனே என் காதலுனுக்குப் புதைதாழி செய்கிறாய். நீ பானை செய்யும் உன் சக்கரத்தில் ஒட்டிக்கொண்டுள்ள சிறிய வெண்ணிறப் பல்லி சக்கரம் சுழலுமிடமெல்லாம் செல்லுமல்லவா? அது போல என் காதலன் காட்டில் செல்லுமிடமெல்லாம் அவனோடு ஒட்டிக்கொண்டு நானும் சென்றேனே. அவன் இறந்த பின்னர் அவனை இட்டுப் புதைக்கும் தாழியில் என்னையும் இடவேண்டும். இருவரையும் இடும் அளவுக்கு அகலமுள்ளதாக பிணத்தாழி செய்வாயாக இப்பாடல் அமைகிறது.

"கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த"[4] (புறம் : 238:02)

பிணமிட்டுக் கவிழ்த்துப் புதைக்கப்பட்ட தாழியின் குவிந்த மேற்புறத்தில் , சிவந்த காதுகளையுடைய ஆண்கழுகுகளும், பெண் கழுகுகளும் அச்சமில்லாத, வலிய வாயையுடைய காக்கையும் , கோட்டானும் கூடி இருக்கின்றன. கள்ளை விரும்பும் வெளிமான் அத்தகைய இடுகாட்டை அடைந்தான். இப்பாடல் வரி இதை உணர்த்துகிறது.

நடுகல் பற்றி இலக்கண குறிப்புகள்

தொல்காப்பியர் ஐந்திணைகள் அடிப்படையில் தெய்வங்களைச் சுட்டினாலும் நடுகல் வீரனையும் கூறிச் செல்கிறார். சங்கப் புலவருள் ஒருவர், நடுகல் வழிபாட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை என்கிறார். ஆநிரைப ;போர் குறித்தும் நடுகல் வழிபாடு குறித்தும் சங்கப்பாக்களில் பெரிதும் காண்கிறேம். தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில் இவ்வகை மரபை ஆறு வகை நிலைகளாய் பிரிக்கிறார்,

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்- சீர்த்தரு சிறப்பின் பெரும்படை, வாழ்தல்"[5]

இந்த ஆறுநிலைக் கூறுகளும் நடுகல் குறித்து வருபவையே, இதிலுள்ள பெரும்படையும், வாழ்த்தலும் நடுகல் வழிபாட்டை குறிப்பதாகும். இதன் அடிப்படையிலேயே நடுகற்கள் எழுப்பியுள்ளனர். முதலில் கல்லெடுக்கும் நிலையில் இருந்து படிப்படியாய் வழிபடும் நிலைக்கு நடுகல் வழிபாடு உயர்ந்தது.

பிற்காலத்தில் எழுதப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலையில் ஆநிரைப்போர்கள் விரிவாகவும் நடுகல் வழிபாடு காவியச் சுவையுடனும் கூறப்பட்டுள்ளன. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதும்போது வெட்சிப்போர், நடுகல் வழிபாடு தொடர்பாகத் தங்கள் கால நடைமுறைகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பதற்கான போரில் வீழ்ந்துபட்ட வீரர்களுக்கு யாழைக் கொண்டு இசைத்துப் பாடும் பாணர் கையறவு பாடுதல் உண்டு.

"வெருவரு வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று"[6]

"மண்மகுளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று"[7]

போரில் மாண்ட வீரர்களுக்கு அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் சிறந்த கல்கொணர்ந்து புனித நீராட்டி அவரது பிணத்தைப் புதைத்த இடத்தில் நடுகல் நட்டு அவரது போர்த்திறத்தையும் புகழினையும் போற்றி நினைவு கூறுவர். இந்நடுகல் வழிபாடு பின்னர் கடவுள் வழிபாடாக மாறியுள்ளது.

புறநானூற்றில் நடுகல்

சங்க இலக்கியங்களில் வீரர்களைத் தமிழ் பெண்கள் விரும்பி, வீரமில்லாதவர்களை வெறுத்தனர். கொல்லேறு தழுவுதல் என்ற காளையை அடக்குதல் , புலி முதலிய விலங்குகளைக் கொல்லுதல் போரில் வீரர்கள் யானைகளையும் குதிரைகளையும் அடக்குதல் யாவும் வீரச் செயல்களாகக் கருதப்பட்டன. வீர மரணம் எய்தியவருக்கு நடுகல் உருவாக்கி வழிபடும் மரபு உருவாயிற்று. இதனை புறநானூற்று பாடல்கள் உணர்த்துகிறது.

"நடுகல் பீலி சூட்டி நார்அரி"[8] (புறம் : 232:03)

அவ்வையார் அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னனுக்கு பாடிய பாடல். காலைப்பொழுதும் இல்லாமல் போகட்டும். ஏன் வாழ்நாட்களும் இல்லாமல் போகட்டும். ஓங்கிய சிகரத்தையுடைய உயர்ந்த மலையுடன் கூடிய நாட்டைப் பகைவர் கொடுத்தாலும்

அதை ஏற்றுக் கொள்ளாதவன். ஒரு நடுகல்லை நட்டு அதற்கு மயில் தோகையைச் சூட்டி ஒரு சிறிய கலத்தில் நாரால் வடிக்கப்பட்ட மதுவைக் பொடுத்தால் அதை எற்றுக் கொள்வானோ?

இறந்தவர்களின் நினைவாக நடுகல் வைப்பதும் , நடுகல்லுக்கு வழிபாடு நடத்துவதும் சங்க காலத்தில் வழக்கில் இருந்தது என்பதற்கு இப்பாடலிலிருந்து அறிய முடிகிறது.

“படம்செய் பந்தர்க் கல் மிசையதுவே”[9] (புறம் : 260:28)

பாணர் பலருக்கு நிலக்கொடை தந்து பாதுகாத்த குறுநில மன்னன் ஒருவன் ஆனிரை மீட்டுத் தந்து, விழுப்புண் பட்டு இறந்து நடுகல்லாகி நிற்கும் நிலைமையை ஒரு பாணன் மற்றொரு பாணனுக்குக் கூறுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

“கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே”[10] (புறம் : 263:18)

களியற்றியாணையின் காலடி போன்ற பறையை முழக்கிக்கொண்டு உதவுபவரை நாடிச் செல்லும் இரவலனே, வழியில் உள்ள நடுபல்லைத் தொழாமல் சென்றுவிடாதே. அது கரந்தைப் போரில் ஆனிரை மீட்டுக்கொண்டு வரும்போது பெருகிவரும் வெள்ளத்தைத் தடுக்க அமைக்கப்பட்டுள்ள கல்லுச் சிறை போல் தடுத்து வென்று பகைவர் வில்லின் அம்பில் மூழ்கி மாண்டவரின் நடுகல். அது அறநிலை ஆறாக நின்றவனின் நடுகல். அந்த நடுகல்லை தொழுது செல்லுங்கள்.

“இனிநட் டனரே! கல்லும் ; கன்றொடு”[11] (புறம் : 264:14)

உறையூர் இளம்பொன் வாணிகனார் பாடிய பாடலில், பரல் கற்களை அடுக்கிக் கட்டிய பதுக்கை கோயிலில் நடுகல் நாட்டனர் . மரல் நாரைக் கிழித்து செல்லிய மாலை தொடுத்து அணிவித்துள்ளனர். மயில் பீலியும் கட்டிவைத்துள்ளர். நடுகல்லில் பெயரும் பொறித்துள்ளனர். இவன் பகைவர் ஓட்டிய ஆனிரைகளைக் கன்றொடு மீட்டுத் தந்தவன் என்பது இப்பாடலின் பொருள்.

“பல்ஆ கோவலர் படலை சூட்டக்

கல்ஆயினையே கடுமான் தோன்றல் “[12] (புறம் : 265:15)

தலைவன் ஒருவன் பரிசிலர்க்குப் பெருமளவில் உதவி செய்து அவர்களைப் பாதுகாத்து வந்தான். அவன் தன் வேந்தர்களுக்குத் துணையாகப் போர் புரிந்து அவர்களை வெற்றிபெறச் செய்தான். இவ்வாறு பரிசில்ர்களைப் பாதுகாத்து, வேந்தர்களுக்கு உறுதுணையாக இருந்த வண்மையும் வலிமையும் மிகுந்த தலைவன் இறந்து இப்பொழுது நடுகல்லாகிய நிலையைக் கண்டு மனங்கலங்கி சோனாட்டு முகையலூர்ச் சிறுகருத்தும்பியார் இப்பாடலை இயற்றியுள்ளார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR 

"ஒளிறு ஏந்து மருப்பின் களிறு ஏறிந்து வீழ்ந்தென்,

கல்லே பரவின் அல்லது,

நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே, "[13] (புறம் :335:10)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகை பூக்களைத் தவிர வேறு வாழ்வில் திணையைக் குறிக்கும் பூக்கள் இல்லை. வரகு, தினை, கொள், அவரை என்னும் நான்கு அல்லாத வேறு உணவுப்பொருள் அந்த மூதில் குடிக்கு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன், என்னும் நான்கு இனக் குடிமக்கள் அல்லது அந்த மூதில் மக்களுக்கு உறவினர் வேறு குடிமக்கள் இல்லை. இப்படி எல்லாம் நான்கு வகைப்பட்டதாக இருக்கும் போது அவர்களுக்குக் கடவுள் மட்டும் ஒன்றே அந்த ஒன்றும் நடுகல் .

## தெகுப்புரை

பழங்காலத்தில் தோன்றிய நடுகல் வழிபாடு இன்று தமிழ்நாட்டில் வணங்கப் பெறும் வீரத்தெய்வ வழிபாடாக மாறியுள்ளது என்பதில் ஐயமில்லை எனலாம். மனித இறப்போடு தொடர்புடையது பதுக்கைகள் நடுகற்களாக இவை பழந்தமிழ் மக்களின் வாழ்வியலையும் வழிபாட்டு முறையை வெளிப்படுத்தும் ஆவணங்களாக உள்ளன. புறநானூற்றுப் பாடல்களில் வெட்சி கரந்தை வீரர்களுக்கும் யானைப்போரில் உயிரிழந்த வீரர்களுக்கும், அரசர்களுக்கும் மக்கள் நடுகலெடுத்து வழிபாடு நடத்தி வந்த பண்பாட்டுச் செய்தியை அறியமுடிகிறது. பழந்தமிழர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்ய ஆரம்ப நிலையில் பதுக்கைகள், திட்டைகள், கற்குவியல்கள் பதுக்கைகளுடன் கூடிய நடுகற்கள், நடுகற்களில் பெயர் பொறித்தல், என்ற நிலையில் வளர்ந்துள்ளதையும் இறந்தப் பிறகும் முன்னோரை வணங்கும் பண்பாட்டு மரபையும் புறநானூற்றுப் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

## சான்றாதாரங்கள்

[1] ஔவை சு.துரைசாமிப் பிள்ளை - புறநானூறு - கௌரா பதிப்பகம் வெளியீடு – 2008

[2] மேலது ,, ,, ,, ,, ,,

[3] மேலது,, ,, ,, ,, ,,

[4] மேலது,, ,, ,, ,, ,,

[5] தமிழண்ணல் – தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி 1- மீனாட்சி புத்தக நிலையம் மதுரை – 2010

[6] புறப்பொருள் வெண்பா மாலை- (விரிச்சி துறை) ப.8 திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் -சென்னை-18- பதிப்பு - 2004.

[7] **மேலது** ,, ,, ,, ,, ,,

[8] **புலியூர்க் கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் கௌரா பதிப்பகம் வெளியீடு** – 2006

[9] **மேலது**,, ,, ,, ,, ,,

[10] **மேலது**,, ,, ,, ,, ,,

[11] **டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை புறநானூறு மூலமும் உரையும்** - 2014

[12] **மேலது**,, ,, ,, ,, ,,

[13] **மேலது**,, ,, ,, ,, ,,